# தமிழ்நாடு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா: திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை! நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளான ஜூன் 3ல் நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் பரமத்தி சாலை, செலம்ப கவுண்டர் பூங்காவில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யும் நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா கலந்து கொண்டு, கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மா.மதிவேந்தன், பெ.இராமலிங்கம், கே.பொன்னுசாமி, து.கலாநிதி மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் வார்டு, கிளை செயலாளர்கள், பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான "செம்மொழி நாளை" முன்னிட்டு திருப்பூர் இரயில் நிலையம் அருகில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட தலைமை கழக, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்டம் மாநகரம் பகுதி ஒன்றியம் நகரம் பேரூர் கழகங்கள் மற்றும் சார்பு அணிகள் சார்பில், கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்குதல் உணவு வழங்குதல், நலத்திட்ட உதவிகள் வழங்கி கரூர் மாவட்டம் முழுக்க, 135 இடங்களில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி மாவட்ட திமுக சார்பில் கரூர் வெண்ணைமலை அன்பு கரங்கள் இல்லத்தில் கழக நிர்வாகிகள் உணவு வழங்கினர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள கலைஞர் பிறந்த இல்லத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு கலைஞர் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் உ. மதிவாணன், இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், க.மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், சோ. ரவிச்சந்திரன், அரூர் மணிவண்ணன், கற்பகம்நீலமேகம், ஒன்றிய கழக செயலாளர்கள். ஆ.தாமல் ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், மகாகுமார், உதயம் வே.முருகையன், சிக்கல் என்.ஆனந்த், இல.பழனியப்பன், கோசி.குமார், எல்.எஸ் ஈ.பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்



சேலம் மத்திய மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த தினத்தையொட்டி அண்ணா பூங்கா அருகேயுள்ள தலைவர் கலைஞரின் சிலைக்கு மாவட்ட கழக செயலாளர். அமைச்சர் இரா. இராஜேந்திரன் மாலை அணிவித்து. மலர். தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் ஜி.கே.சுபாசு பொருளாளர். மு. கார்த்திகேயன். தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள். சி. ராஜேந்திரன் கே.டி. மணி. தாமரைகண்ணன். மேயர். ஆ ராமச்சந்திரன். மாநகர செயலாளர். பா. ரகுபதி அவைத்தலைவர் கே.ஆர்.முருகன் உட்பட மாவட்ட மாநகர .ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்எதிட்டக்குழு உறுப்ஸ்பினர் .எஸ்.பழனிமாணிக்கம் ச.முரசொலி எம்.பி, டி. கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், சண்.இராமநாதன், எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூகதி, எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான "செம்மொழி நாளை" முன்னிட்டு காந்திபுரம், அண்ணா சிலை முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக சொத்து பாதுகாப்புக்குழு துணைத்தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், மேயர் இரங்கநாயகி இராமச்சந்திரன் உள்பட தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




செம்மொழி நாள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாளையொட்டி தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர்,நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி,நகர செயலாளர் நாட்டான்.மாது தலைமையில் நகராட்சி பூங்காவில் இருந்து அமைதி ஊர்வலமாகச் சென்று நான்கு ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,நகர மன்ற தலைவர் லட்சுமி.மாது,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,கிளைக் கழக செயலாளர்கள்,BLA 2 ,BLC,கவுன்சிலர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.